Chenkaantal
A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal

Volume - 1, Special Issue - 1, January 2022 E-ISSN: 2583-0481

# Awarness Thoughts in the Poems of Aalaapanai

**Dr.S.Sabeetha,** Tamil Activist,
898, Meenachi Sundaram Nagar Part 1, K.T.C Nagar, Tirunelveli, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0000-0002-7771-4450**
**DOI: 10.5281/zenodo.6619711**

## Abstract

*Abdul Rahman's one of the unique poetry book is Aalaapanai. It is a collection of supernatural poems. The expression of behavior in poetry is about various thoughts and unique. Abdul Rahman's style of poetry is imaginative and instructive.Hence, this article focuses on the thoughts of awareness ion the poems of Abdul Rahman from the poem collection "Aalaapanai".*

**Keywords:** Society, Life, Awarness, Natural, Abdul Rahman.

.

## References

[1] Abdul Rahman. *Aalaapanai*. National Publication, Chennai.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

# ஆலாபனைக் கவிதைத் தொகுப்பில் விழிப்புணர்வுச் சிந்தனைகள்

**முனைவர் சே.சபிதா**, தமிழ் ஆர்வலர்,
898 யூ, மீனாட்சி சுந்தரம் நகர், பிளாட் எண்-81, கே.டி.சி.நகர், திருநெல்வேலி , தமிழ்நாடு, இந்தியா.
**ORCiD: https://orcid.org/0000-0002-7771-4450**
**DOI: 10.5281/zenodo.6619711**

**ஆய்வுச்சுருக்கம்**

கவிக்கோ அப்துல்ரகுமானின் படைப்புகளில் ஒன்றான ஆலாபனை பல்பொருள் கவிதைத் தொகுப்பாகும். கவிதையில் நடப்பியலினை கூறுவது புதுக்கவிதைக்கே உரிய சிறப்பாகும். அப்துல்ரகுமானின் கவிதை நடையானது கற்பனையோடு அறிவுறுத்தும் பான்மையதாகும். ஆலாபனைக் கவிதைத் தொகுப்பில் விழிப்புணர்வுச் சிந்தனைகளை எங்கனம் அறிவுறுத்துகிறார் என்பதே இக்கட்டுரையாகும்.

**திறவுச்சொற்கள்:** சமூகம், வாழ்க்கை, விழிப்புணர்வு, இயற்கை, அப்துல் ரஹ்மான்.

**முன்னுரை**

புதுக்கவிதை நவீன கால நடப்பியலை பிரதிபலிக்கக்கூடிய கண்ணாடியாகும். தனிமனித, சமூக பிரச்சனைகளை மையமிட்டே புத்திலக்கியங்கள் படைக்கப்படுகின்றன. பிரச்சனைகளை மட்டும் மையப்படுத்தாது மக்களிடத்து நல்ல விழிப்புணர்வையும் எடுத்துரைக்கிறது நவீன இலக்கியங்கள். அப்துல் ரகுமானின் ஆலாபனை கவிதைத் தொகுப்பில் கூறப்பட்ட விழிப்புணர்வுச் சிந்தனைகளை ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.

***ஆலாபனை* நூலும் பொருளும்**

ஆலாபனை என்ற கவிதைத் தொகுப்பானது 1995ல் வெளி வந்ததாகும். 1999ல் இந்நூலிற்கு சாகித்ய அகாதெமி விருது கிடைத்தது. ஆலாபி +அனம் =ஆலாபனை. ஆலாபி என்பதற்கு ஒரு இராகத்தை வட்டமாக சுற்றி சுற்றிப் பாடுதல் என்பது பொருள். ஆலாபனை என்பற்கு ஒரு குறிப்பிட்ட உணர்வை இசையின் மூலம் வெளிப்படுத்தல் என்பது பொருளாகும்.

**நிலைப்பெற்றிரு**

வாழ்க்கையில் பிறப்பு முதல் இறப்பு வரை எதுவும் நிச்சயிக்கப்பட்ட ஒன்றன்று. காலங்கள்கடந்தும்நிலைபெற்றிருப்பதுஅவரவர்செய்கைகளாகும்.மனிதனாய் பிறந்தவர்கள் மரணிப்பது உறுதி. மரணிக்கும் காலத்திற்குள்ளாக நம்மை நிலைநிறுத்துதல் அவசியம். நாம் வாழ்ந்ததற்கான அடையாளம் ஏதுமின்றி இறந்து போதல் என்பது அழகல்ல. சிறிதேனும் நற்பெயரை இப்புவியில் பதித்துச் செல்லுதல் அனைத்தினின்றும் சிறந்ததென,

**“மரணக் காற்றில்**
**ஓர்விளக்கைப் போல்**
**அணைந்து போகாதே**
**ஓர்ஊதுவத்தியைப் போல்**
**கொஞ்சம் நறுமணமாவது**

**விட்டு விட்டு போ" (ஆலாபனை, பக் 30)**

எனக் குறிப்பிடுகிறார்கவிக்கோ.

**உன்னை அறிந்து கொள்**

தன்னைத் தானே சுய ஆய்வு செய்பவன் கண்டிப்பாக உயர்நிலை அடைவன். தன்னின் மிக்க விமர்சகர் இவ்வுலகில் இல்லை. எவனொருவன் தன்னின் நன்மைத்தனத்தையும் தன்னின் உண்டான தீய குணங்களினை விமர்சித்து மாற்றிக் கொள்கிறானோ அவனே சிறந்த ஆளுமையாய் உருப்பெருகிறான். தன்னை அறியாத, உணராத நபரை,

**"நீ முத்துகள் நிறைந்த சமுத்திரம்**
**ஆனால் நீயோ**
**கிளிஞ்சல் பொறுக்க**
**அலைந்து கொண்டிருக்கிறாய்" (ஆலாபனை, பக் 33)**

என்று குறிப்பிடுகிறது ஆலாபனை. தன் திறனுணராத நபர் வாழ்வில் தேடலின் தன்மையை உணராதவன் ஆவர்.

**மானுடம்**

இயற்கையிலும் செயற்கையிலும் கலந்த வாழ்வியலில் மனிதப் பிறவியின் குறிக்கோள் படைப்பின் அர்த்தமாய் சுதந்திரத் தன்மையுடன் இயற்கையை அனுபவித்து வாழ்தலும் பிற உயிர்களின் துன்புறுத்தலில்லாத ரசனையுமாகும். உயிர் துன்புறுத்தலில்லா வாழ்விலேயே மானுடம் துளிர்க்கிறது.

**"எங்கே அழகும் சுதந்திரமும் உண்டோ**
**அங்கே தான்**
**மானுடம் திருவிழா கொண்டாடுகிறது'' (ஆலாபனை, பக்** 41)

என்ற வரிகள் மானுடத் தன்மையை வெளிப்படுத்துகிறது.

**தோல்வி என்னும் கண்ணாடி**

நம்மை நாமே செதுக்குவதற்கு உறுதுணையாய் அமைவது நம் வெற்றியும் தோல்வியுமாகும். வாழ்க்கை என்னும் போர்களத்தில் நம்மை ஆயுதங்களாக போருக்கு தயார்செய்வது நம் வெற்றியும் தோல்வியும் தாம். நம்மை கூராக்கும் கருவியாக திகழ்வது நமது தோல்வியே ஆகும். தன்னைத் தானே மதிப்பீடு செய்வதற்கும் தோல்வியே படிக்கல்லாய் அமைகிறது.

**"தோல்வியே நீ என் கண்ணாடி**
**என்னையே நான் பார்த்துக் கொள்ள**
**உதவுவது நீயல்லவா?" (ஆலாபனை, பக்** 54)

என்ற கவிதை இதனை நிருபிக்கிறது.

**மனம் என்னும் பறவை**

மனம் என்பது சிறகினையுடைய பறவை போன்றது. மனத் திண்மைக் கொண்டு எத்தகைய உயரத்திலும் நம்மால் பறக்க முடியும். மனமென்னும் கற்பனையான பறவை மூலம் எத்தகு உயரத்தினையும் எட்ட முடியும். மனத்தினை ஓர் எல்லைக்குள் அடைத்து வைக்க முடியாது. மனத்தினை அடக்குதல் அவரவர்களிடத்தே உள்ளது. முடிவிலாத் தன்மையுடன் விளங்கும் மனத்தினை முயற்சியின துணைக் கொண்டு உயரங்களை எட்ட இயலும்.

**சொந்தப் படைப்பு**

பிறர் துணையில்லாத சொந்தத் தன்மையுடன் செயல்படுதல் ஒரு தனித் திறனாகும். தனித்திறனால் அடைதலென்பது சார்பற்ற தன்மையின் பெருமிதமெனக் கொள்ளலாம். கல்வி படிப்பினைகளில் சொந்த முயற்சியில் எழுதுதல் என்பது ஆகச் சிறந்த செயலாகும். படைப்புகள் சொந்தத் தன்மையுடன் உருவாக வேண்டும். சொந்த எழுத்தின் மூலம் சுயத் தன்மையுடன் எழுதும் எவரும் அதற்கான பலனைப் பெற்றுக் கொள்வர்

**"உன் சொந்த நெருப்பால்**
**எழுதப் பழகு**
**உன் எழுத்தும்**
**மின்னலாகும்" (ஆலாபனை, பக் 63)**

என்ற கவிதையின்வழி எழுத்தின் பெருமையை அறிய முடிகிறது.

**மாதிரிகளை எடுத்து கொள்ளாதே**

நம் பிறப்பிலிருந்தே ஆரம்பிக்கிறது நமக்கான மாதிரிகள். பெற்றோர்களின் பிம்பங்களாக நாம் திகழ்கிறோம். வளரும் போது சமூக மாதிரிஅடையாளங்களை உள் வாங்கி அதன்படி வளருகிறோம். ஒவ்வொரு பருவங்களில் நமக்கான வளச்சிகளில் பிறரின் பிம்பங்கள் நம்மினுள் ஒளிந்து நிற்கிறது. மாதிரிகளில்லாத வாழ்வை நாம் உருவாக்க வேண்டும்

**"நீ உன் மாதிரியின்**
**நிழலாகிவிடுகிறாய்" (ஆலாபனை, பக் 68)**

என்பதன் வழி நாம் ஏதாவது ஒரு வகையில் ஒரு மாதிரியை பின்பற்றுவதை அறிய முடிகிறது.

**வாழ்க்கை முரண்களும் போராட்டங்களும்**

போராட்டங்களும் பிரச்சனைகளும் நிறைந்ததே வாழ்க்கை.வாழ்க்கையில் நாம் சந்திக்கும் முரண்களே நமக்கு சக்தியை தருகிறது.வாழ்க்கை போராட்டங்களில் நாம் எடுக்கும் முடிவுகள் நம்மை செதுக்குகிறது. நம்மை புதிதாய் சிந்திக்க வைக்கிறது. திறனை மழுங்காமல் மேலும் கூர்மைப்படுத்துகிறது.

**"முரண்களின் மோதலில்**
**நீ வெளிப்படுகிறாய்**
**போராட்டம்**
**உனக்கே தெரியாமல்**
**உனக்குள் ஒளிந்திருக்கும்**
**சக்தியை வெளிப்படுத்துகிறது" (ஆலாபனை, பக் 83)**

என்ற அப்துல் ரகுமானின் கவிதை சிந்திக்கத் தக்கது.

**உண்மைத் தன்மை**

அறிந்ததை அறியாததை உள்ளனவற்றை இல்லாதவற்றை அவற்றை அவற்றின் தன்மையுடன் வெளிப்படுத்தலே உண்மைத் தன்மையாகும். நாம் அறிந்த உண்மையை அறியாதவற்கு அறிவுறுத்தலில் நேர்மை வேண்டும் .நம் எண்ணங்கள்,பார்வைகள் அதனையும் தாண்டி நிற்கிறது உண்மைத் தன்மை,

**"தெரிவது மட்டுமல்ல**
**உண்மை**
**பார்வைக்கு**

**அப்பாலும் இருக்கிறது**

**உண்மை" (ஆலாபனை, பக் 86)**

என்ற கவிதை மூலம் உண்மையின் நிலைபாட்டை அறிய முடிகிறது

**அகங்காரம் தவிர்**

தன்னை அகங்கார கீரிடத்தால் அலங்கரிக்கும் எவரும் சமூகத்தில் முன்னேற முடிவதில்லை.சுய போற்றுதலென்பது நம்மின் நன்மைத் தன்மையை கூட ஒன்றுமில்லாமல் ஆக்கிவிடும். நம் நல் அடையாளங்களை வெளியுலகிற்கு மறைப்பதாய் நம் அகங்காரம் காரணமாகிறது.

**"நான் என்பது இமை**

**அது உன் கண்களுக்கு**

**மறைப்பாகவும் தூக்கமாகவும்**

**இருக்கிறது" (ஆலாபனை, பக் 98)**

என்பது ஆராயத்தக்கது.

**ஆய்ந்துணர்**

மக்கள் அனைவருக்குமே உள்ள ஒன்றித்த குணங்களில் ஒன்று தன்னிலையினின்று நியாயப்படுத்திக் கொள்ளுதலாகும். எல்லா வித சூழலுக்கும் மறுபக்கம் என்ற ஒன்று உண்டு.மறுபக்கத்தை ஆராய்தல் தன்னை நியாயப்படுத்தலைத் தவிர்க்கும்.

**"உன் கண்கள் சிந்துவது மட்டும்**

**கண்ணீர்என்று**

**சொல்லாதே**

**வேறு கண்ணீர்களும் இருக்கின்றன**

**தேர்ந்து கொள்" (ஆலாபனை, பக் 110)**

என்ற கவிதையின்வழி எந்த ஒரு செயலையும் துலாவின் தன்மையோடு ஆராய வேண்டும் என்பதை அறிய முடிகிறது.

**முடிவுரை**

அப்துல் ரகுமானின் ஆலாபனை கவிதைத் தொகுப்பு உயிரோட்டமான வரிகளுடன் விழிப்புர்ணவு சிந்தனைகளை மனத்தில்ஆழமாகவும் அழகுத் தன்மையுடனும் பதிவு செய்கிறது.

**துணை நூற்பட்டியல்**

[1] அப்துல்ரகுமான். *ஆலாபனை*. நேஷனல்பப்ளிஷர்ஸ், தியாகராயநகர், சென்னை-600017, முதற் பதிப்பு: 1995.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.